ISSN: 2582-5518




புதுகை வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351






### நேரு விளையாட்டு அரங்கில் கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகள்

# தொடக்கம்

## பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். முதல்வர் ஸ்டாலின், ஆளுநர் பங்கேற்பு




**சென்னை : ஜன. 20, நேரு விளையாட்டு அரங்கில் கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகளை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.**

மத்திய அரசு திட்டத்தின் கீழ் கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகள் கடந்த 2018ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் நடத்தப்பட்ட இந்த போட்டியானது, இந்தாண்டு தமிழ்நாட்டில் நடைபெற உள்ளது. தமிழ்நாடு அரசு மற்றும் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் 2024ம் ஆண்டுக்கான கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகள் நடைபெற உள்ளன. குறிப்பாக சென்னை, கோவை, மதுரை, திருச்சி ஆகிய 4 மாவட்டங்களில் இந்த விளையாட்டு போட்டிகள் நடைபெற உள்ளது. இதில் 18 வயதுக்குட்பட்டவர்கள் பிரிவில்நடத்தப்படும்கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகள் நேற்று முதல் வரும் ஜன. 31 வரை நடைபெற உள்ளது. கேலோ இந்தியா போட்டிகளில் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 5,500க்கு மேற்பட்ட விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்க உள்ளனர்.

மொத்தம் 27 வகையான பிரிவில் போட்டிகள் நடத்தப்படுகிறது. இந்நிலையில், தமிழ்நாட்டில் முதன் முறையாக 'தேசிய அளவிலான கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகள்' நடைபெற உள்ளது. கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைப்பதற்காக சென்னை வந்த பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. 3 நாட்கள் பயணமாக தமிழ்நாட்டுக்கு வந்துள்ள பிரதமர் மோடியை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்றனர். தொடர்ந்து நேரு விளையாட்டு மைதானத்திற்கு செல்லும் வழியில் பிரதமர் மோடிக்கு தமிழக பாரம்பரிய கலைநிகழ்ச்சிகளுடன் வழிநெடுக உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிலையில் நேரு விளையாட்டு அரங்கில் கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகளை தொடங்கி வைத்தார் பிரதமர் மோடி.

இதனையடுத்து, நாட்டின் பொதுசேவை ஒளிபரப்பு நிறுவனமான பிரசார் பாரதியின் கீழ் இயங்கும் 'தூர்தர்ஷன் பொதிகை' தொலைக்காட்சியானது 'டிடி தமிழ்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதனை பிரதமர் நரேந்திர மோடி அறிமுகம் செய்து வைத்தார்.

தொலைக்காட்சி சேனல் லோகோவின் வண்ணமும் மாற்றப்பட்டுள்ளது. இந்த மாற்றம் குறித்து மத்திய அரசு வெளியிட்ட தகவல்கள் : 'பொதிகை என்ற பெயரில் இதுவரை ஒளிபரப்பு சேவையை வழங்கி வந்த இத்தொலைக்காட்சியின் பாரம்பரியம் குன்றாமல், அதேவேளையில் புதிய எண்ணங்கள், புதிய வண்ணங்கள் என்ற லட்சியத்துடன் புதுமையான நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்கிறது. இவற்றில் நான்கு பொழுதுபோக்கு நெடுந்தொடர்கள், திரைப்படங்கள், திரைப்படப் பாடல்களை கொண்ட 'ஒலியும் ஒளியும்' நிகழ்ச்சி ஆகியவை அடங்கும். புதிய அம்சங்களுடன் 'டிடி தமிழ்' தொலைக்காட்சியை தொடங்குவதற்காக பிரசார் பாரதி சார்பில் ரூ.39.71 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

வழக்கமான காலை 8 மணி செய்திக்குப் பின்னர், காலை 9 மணி, 10 மணி, நண்பகல் 12 மணி, பிற்பகல் 2மணி, 3 மணி, 4 மணி ஆகிய நேரங்களில் தலா ஐந்து நிமிட விரைவுச் செய்திகள் புதிதாக இடம்பெறவுள்ளன. ஏற்கெனவே ஒளிபரப்பாகி வரும் காலை 11 மணி, பிற்பகல் 1 மணி, மாலை 5 மணி ஆகிய செய்தி அறிக்கைகள் தொடர்ந்து தலா 30 நிமிடங்களுக்கு இடம்பெறும்.

இரவு 7 மணி செய்தி இனி ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரத்துக்கு பல்வேறு புதிய அம்சங்களுடன் ஒளிபரப்பாகும். இதில் அந்தந்த நாளுக்கான முக்கிய செய்திகள், சம்பந்தப்பட்ட துறை வல்லுநர்களின் கருத்துகள், தேசிய, மாநில, சர்வதேச செய்திகள், பொருளாதாரம், விளையாட்டு, பல்சுவை, வானிலை போன்ற தகவல்கள் விரிவாக இதில் இடம்பெறும்.

இரவு 10 மணி செய்தி முழுவதும் விரைவுச்செய்தியாக ஒளிபரப்பாகும். வார நாட்களில் இடம்பெறும் ஒரு மணிநேர மக்கள் மேடை விவாத நிகழ்ச்சி, இனி மாலை 6 மணிமுதல் இரவு 7 மணி வரை 'எதிரும் புதிரும்' என்ற தலைப்பில் இடம்பெறும். நான்கு புதிய பொழுதுபோக்கு நெடுந்தொடர்கள் டிடி தமிழ் தொலைக்காட்சியில் இடம்பெறவுள்ளன. ராடான் மீடியா ஒர்க்ஸ் நிறுவனம் வழங்கும் 'தாயம்மா குடும்பத்தார்', விகடன் புரொடக்ஷன்ஸ் நிறுவனம் தயாரித்து அளிக்கும் 'பட்ஜெட் குடும்பம்,' சுரேஷ் கிருஷ்ணா புரொடக்ஷென்ஸ் நிறுவனம் தயாரிக்கும் 'சக்தி ஐ.பி.எஸ்' ஆகிய தொடர்கள் ஒவ்வொரு நாளும் இரவில் ஒளிபரப்பாகவுள்ளன.

மேலும், வார நாட்களில் கிருஷ்ணசுவாமி அசோசியேட்ஸ் தயாரித்துள்ள 'மகாகவி பாரதி' என்ற தொடர் இடம்பெறவுள்ளது. இது தவிர சமையல், சுற்றுலா, ஆயுர்வேதா, வீட்டு மருத்துவம் என பல்வேறு நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகும். உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் தாங்கள் வாழும் பகுதிகளில் தமிழ் கலாச்சாரத்தை எவ்வாறு பேணி வளர்க்கிறார்கள் என்பதை சித்தரிக்கும் 'தமிழ் பாலம்' என்ற நிகழ்ச்சி டிடி தமிழ் தொலைக்காட்சியால் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பாகவுள்ளது.

மேலும், கனரா வங்கி நிதியுதவியுடன் 'ஸ்டார்ட் அப் ஹேண்ட்ஷேக்' என்ற புத்தாக்க தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் நிகழ்ச்சியும் புதிதாக இடம்பெறும் நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். பழங்கால தமிழ் இலக்கியமான திருமந்திரம் தொடர்பான தினசரி நிகழ்ச்சியும் ஒளிபரப்பாகவுள்ளது' என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.




புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2024 -ன் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் தொடர்பான கூட்டம், நில சீர்த்திருத்த ஆணையர் / வாக்காளர் பட்டியல் பார்வையாளர் முனைவர் வெங்கடாசலம் தலைமையில், புதுக்கோட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் மெர்சி ரம்யா முன்னிலையில் நேற்று நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) ஸ்ரீதர், வருவாய் கோட்டாட்சியர்கள் முருகேசன் (புதுக்கோட்டை), சிவக்குமார் (அறந்தாங்கி), நகராட்சி ஆணையர் (புதுக்கோட்டை/அறந்தாங்கி (பொ)) ஷியாமளா, தனி வட்டாட்சியர் (தேர்தல்) சோனை கருப்பையா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## மத்திய அரசு கடந்த 10 ஆண்டுகளில் ரூ. 30 லட்சம் கோடியை பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைத்துள்ளது : பிரதமர் மோடி




**சோலாப்பூர் : ஜன. 20, கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசு ரூ. 30 லட்சம் கோடியை பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைத்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**

மகாராஷ்டிராவின் சோலாப்பூரில் நடைபெற்ற அரசு விழாவில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி, அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் அனைத்து நகரங்களுக்கும் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் மற்றும் கழிவுநீர் அகற்றும் திட்டத்தை தொடங்கி வைத்தார். மேலும், பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்காக கட்டப்பட்ட 15 ஆயிரத்து 24 வீடுகளை பயனாளிகளுக்கு பிரதமர் மோடி வழங்கினார். பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட இந்த வீடுகள், நெசவாளர்கள், சிறுகடை வைத்திருப்பவர்கள், பீடி சுற்றுபவர்கள், ஓட்டுநர்கள் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில், மகாராஷ்டிரா முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, துணை முதல்வர்கள் தேவேந்திர பட்னவிஸ், அஜித் பவார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழாவில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "அயோத்தியில் ராமர் கோயில் வரும் 22ம் தேதி திறப்பு விழா காண உள்ளது. பிரம்மாண்டமான அந்த கோயில் திறப்பு விழா காண உள்ளதை ஒட்டி பக்தி பரவசமான சூழல் உருவாகி இருக்கிறது. அன்றைய தினம் நாட்டு மக்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் அகல் விளக்குகளை ஏற்ற வேண்டும். அந்த ராம ஜோதி நமது நாட்டின் ஏழ்மையைப் போக்க நம்மை ஊக்குவிக்கும். நமது நாட்டில் வறுமையை ஒழிப்போம் என்ற கோஷம் நீண்ட காலமாக எழுப்பப்பட்டு வருகிறது. ஆனால், வறுமை முற்றாக ஒழியவில்லை. வறுமையை ஒழிக்கும் நோக்கில் எனது அரசு கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி உள்ளது. இதன் காரணமாக, கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து விடுபட்டுள்ளனர்.

பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வீடுகள் இன்று (ஜன. 19) பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மிகப் பெரிய எண்ணிக்கையில் பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். இந்த திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வீடுகளை நான் பார்க்கச் சென்றேன். நான் குழந்தையாக இருந்தபோது இதுபோன்ற ஒரு வீட்டில் வசிக்க வாய்ப்பு கிடைக்குமா என்று ஆசைப்பட்டேன். இன்று, அதுபோன்ற வீடுகளை பார்ப்பதில் திருப்தி அடைகிறேன். இத்திட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான குடும்பங்களின் கனவுகள் நனவாகியுள்ளன. அவர்களின் ஆசியே எனக்கு மிகப்பெரிய சொத்து.

கடந்த 10 ஆண்டுகளில், மத்திய அரசு ரூ.30 லட்சம் கோடியை பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைத்துள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன் உலக அளவில் 11-வது இடத்தில் இருந்த இந்திய பொருளாதாரம் தற்போது 5வது இடத்திற்கு முன்னேறி உள்ளது. அடுத்து வரக்கூடிய எனது அரசின் ஆட்சிக் காலத்திற்குள் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதாரமாக உருவெடுக்கும். இது எனது வாக்குறுதி" என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

## 2024 மக்களவை தேர்தலுக்கு ஆயத்தமாகும் திமுக 3 குழுக்களை அமைத்தது – உதயநிதி, மேயர் பிரியாவுக்கு வாய்ப்பு

**சென்னை : ஜன. 20, 2024 மக்களவைத் தேர்தலுக்கு ஆயத்தமாகும் வகையில் திமுக அறிக்கை தயாரிப்பு குழு, மக்களவைத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு, கூட்டணிப் பேச்சுவார்த்தைக்கான குழு என 3 குழுக்களை அமைத்து அறிவித்துள்ளது. இதில் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவில் உதயநிதி ஸ்டாலினும், தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவில் சென்னை மாநகராட்சி மேயர் பிரியாவும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.**

மக்களவைத் தேர்தலுக்கான அறிக்கை தயாரிப்பு குழு மக்களவை எம்.பி. கனிமொழி தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில், திமுக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், விவசாய அணிச் செயலாளர் ஏகேஎஸ் விஜயன், சொத்துப் பாதுகாப்புக் குழு செயலாளர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், தொழில்நுட்ப அணிச் செயலர் டிஆர்பிராஜா, வர்த்தகர் அணி துணைத் தலைவர் கோவி.செழியன், எம்.பி. ராஜேஸ்குமார், மாணவரணிச் செயலாளரும், எம்எல்ஏவுமான சிவிஎம்பி. எழிலரசன், மேயர் பிரியா ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

மக்களவை தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கவும், மேற்பார்வையிடவும் அமைக்கப்பட்டுள்ள குழுவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, ஆர்.எஸ்.பாரதி, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்



இடம்பெற்றுள்ளனர்.

தொகுதி உடன்பாடு குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட, திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையில் அமைச்சர்கள் கே.என்.நேரு, (முதன்மைச் செயலாளர்), இ.பெரியசாமி (துணைப் பொதுச் செயலாளர்), க.பொன்முடி, (துணைப் பொதுச்செயலாளர்), ஆ.ராசா (துணை பொதுச் செயலாளர்), எம்ஆர்கே. பன்னீர்செல்வம் (உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டு மத்தியில் பாஜக தலைமையிலான ஆட்சி அமைந்தது. அப்போது தமிழகத்தில் 39 தொகுதிகளில் 38-ல் திமுக அதன் கூட்டணிக் கட்சிகள் வெற்றி பெற்றன. இந்நிலையில் இந்த மக்களவைத் தேர்தலிலும் வலுவான கூட்டணியோடு அனைத்து தொகுதிகளையும் கைப்பற்ற திமுக வியூகம் வகுத்து வருகிறது. அதன் முதல் அடியாக தேர்தல் அறிக்கை, தேர்தல் ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டணிப் பேச்சுவார்த்தை குழுக்களை அமைத்து கட்சி உத்தரவிட்டுள்ளது. குழுக்களில் இளையோரான உதயநிதி ஸ்டாலின், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ஆகியோர் இடம் பெற்றிருப்பது கவனம் பெற்றுள்ளது.

## பழனி தைப்பூச திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



**பழனி : ஜன. 20, அறுபடை வீடுகளில் மூன்றாம்படை வீடான பழனியில் தைப்பூசத்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.**

தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு தமிழகம் முழுவதுமிருந்து பக்தர்கள் பாத யாத்திரையாக வந்த வண்ணம் உள்ளனர். தைப்பூசத்திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருக்கல்யாணம் வரும் ஜனவரி 24ம் தேதி மாலை நடைபெறுகிறது. தொடர்ந்து அன்று இரவு நான்கு ரதவீதிகளில் வெள்ளித் தேரோட்டமும், ஜனவரி 25ம் தேதி முக்கிய நிகழ்வான தைப்பூசத் தேரோட்டமும் நடைபெறுகிறது. நேற்று முதல் தினமும் அருள்மிகு முகத்துக்குமாரசாமி வள்ளி, தெய்வானை சமேதராக தங்கமயில், வெள்ளிமயில், ஆட்டுக்கிடா, காமதேனு உள்ளிட்ட வாகனங்களில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பர்.

கொடியேற்ற நிகழ்ச்சியில் பழனி கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள், இணை ஆணையர் மாரிமுத்து உட்படப் பலர் கலந்து கொண்டனர். தைப்பூச விழாவினைத் தொடர்ந்து வரும் ஜனவரி 28ம் தேதி இரவு தெப்பத்தேரும், தொடர்ந்து கொடியிறக்க நிகழ்ச்சியுடன் தைப்பூசத் திருவிழா நிறைவடைய உள்ளது. தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு பாதயாத்திரையாக வரும் பக்தர்களின் வசதிக்காகத் திருக்கோவில் நிர்வாகம், பழனி நகராட்சி சார்பில் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

தமிழகம் முழுவதும் உள்ள ஊர்களுக்கு 600க்கும் மேற்பட்ட சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளது. பல்வேறு இடங்களில் தங்குமிடம், மின்சாரம், குடிநீர், கழிவறை, மருத்துவம், உள்ளிட்ட வசதிகளைக் கோவில் நிர்வாகம் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பக்தர்களின் பாதுகாப்பிற்காக பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

## அயோத்தி ராமர் கோயில் பிரதிஷ்டை விழா : புதுச்சேரியில் 22-ம் தேதி அரசு விடுமுறை

புதுச்சேரி : ஜன. 20,

அயோத்தியில் ராமர் கோயில் பிரதிஷ்டை விழாவையொட்டி புதுச்சேரியில் வரும் 22-ம் தேதி அரசு விடுமுறை விடப்படுவதாக முதல்வர் ரங்கசாமி அறிவித்துள்ளார். மேலும், அயோத்தி ராமர் கோயில் கும்பாபிஷேகத்தை பக்தர்கள் காணொலியில் காண புதுச்சேரி, காரைக்கால் கோயில்களில் ஏற்பாடு செய்ய இந்து அறநிலையத்துறை அறிவுறுத்தியுள்ளது.

அயோத்திராமர் கோயிலில் வரும் 22ம் தேதி சிலை பிரதிஷ்டை விழா நடைபெற உள்ளது. இந்த விழாவை முன்னிட்டு, அன்றைய தினம் அரை நாள் விடுப்பு வழங்குவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. ஊழியர்களிடமிருந்து வந்த அதிகப்படியான கோரிக்கை காரணமாக அரசு இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் - பாஜக கூட்டணி ஆட்சி நடக்கிறது. இதுதொடர்பாக புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியிடம் கேட்டதற்கு, "ராமர் கோயில் பிரதிஷ்டை விழாவையொட்டி வரும் 22-ம் தேதி அரசு விடுமுறை விடப்படுகிறது. இதற்கான அரசு உத்தரவு விரைவில் வெளியாகும்" என்றார்.

அயோத்தி ராமர் கோயில் கும்பாபிஷேகத்தை பக்தர்கள் காண காணொலியில் புதுச்சேரி, காரைக்கால் கோயில்களில் ஏற்பாடு செய்ய இந்து அறநிலையத்துறை அறிவுறுத்தியுள்ளது.

வரும் 22ம் தேதி அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேக நிகழ்ச்சியை பக்தர்கள் அனைவரும் காணொலி மூலம் காண வசதியுள்ள கோவில்களில் அன்று மதியம் 12 மணி முதல் 2.30 மணி வரை புதுச்சேரி, காரைக்காலில் ஏற்பாடு செய்யவேண்டும். உச்சிகால பூஜை நடை சாத்தப்பட்டு, பிரகாரம் மற்றும் உள் மண்டபங்களில் கும்பாபிஷேக நிகழ்ச்சியை பக்தர்கள் பார்க்க ஏற்பாடு செய்யவேண்டும் என இந்து சமய அறநிலையத்துறை கோயில் நிர்வாகங்களுக்கு தெரிவித்துள்ளது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

கட்டளையிட விரும்புபவன்
முதலில் பணிவதற்கு
கற்றுக்கொள்ள வேண்டும்




# புளியங்குடி மனோ கல்லூரி மற்றும் மருதம் பயிற்சி மையம் இணைந்து நடத்திய சாலை விழிப்புணர்வு பேரணி



**தென்காசி : ஜன. 20,**

**தென்காசி மாவட்டம், புளியங்குடி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் கல்லூரி, மருதம் பயிற்சி மையம் மற்றும் மக்கள் உதவி கூட்டமைப்பு இணைந்து சாலை பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு புளியங்குடியில் போக்குவரத்து விதிமுறைகளை மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.**

இந்நிகழ்ச்சிக்கு மனோ கல்லூரி முதல்வர் முனைவர் கண்ணன் தலைமை தாங்கினார். மருதம் பயிற்சி மையம் ஒருங்கிணைப்பாளர் கற்பகராஜா முன்னிலை வகித்தார். கிராம நிர்வாக அலுவலர் தமிழ்பிரியன் வரவேற்புரை வழங்கினார். சாலை பாதுகாப்பு ஊர்வலத்தை புளியங்குடி நகர் மன்ற தலைவி விஜயா சௌந்தராஜன் மற்றும் புளியங்குடி காவல் ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் மக்கள் உதவி கூட்டமைப்பினர் ஒரு சொல்மணி, சாவனா செய்யது, ஹோட்டல் வெள்ளத்துரை, ஐயூப், பிரபா, மருதம் பயிற்சி மையம் ஆசிரியர்கள் வி.ஆர். முருகேசன், கிருஷ்ணகுமார், அருண்குமார், சுந்தர்ராஜ், துரை, மகேஸ்குமார், சிவா, மாரிராஜ், முத்துராஜ், சுரேஷ்குமார், காளிராஜ், மருதம் அறக்கட்டளை தலைவி இந்துமதி, செயலாளர் சுரேஷ்குமார், சந்தோஷ், அறக்கட்டளை உறுப்பினர்கள் சேகர், இராம், கண்ணன், அய்யப்பன், முத்துராஜ், பரத், நவீன், செல்வமணி, மாரிமுத்து, மதன்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். சாலை விழிப்புணர்வு பேரணியில் 1000 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் மனோ கல்லூரி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். சுரேஷ்குமார் நன்றி கூறி விழிப்புணர்வு பேரணியை நிறைவு செய்தார்.

# சங்கரன்கோவிலில் திமுக இளைஞர் அணி மாநாடு தொடர்பான விழிப்புணர்வு பிரசுரங்கள் பொதுமக்களுக்கு வழங்கல்



**சங்கரன்கோவில் : ஜன. 20,**

**நாளை திமுக இளைஞரணி 2வது மாநாடு சேலத்தில் மிகப் பிரமாண்டமான முறையில் திமுக இளைஞரணி மாநில செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற உள்ளது.**

இந்த மாநாடு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் சங்கரன்கோவில் வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமையில் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது. இதில் மாவட்ட அவைதலைவர் பத்மநாபன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் யூஎஸ்டி சீனிவாசன், பரமகுரு, மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் மருத்துவர் செண்பகவிநாயகம், மாவட்ட பொருளாளர் சரவணன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, ஒன்றிய செயலாளர்கள் சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலாசங்கரபாண்டியன், கடற்கரை, பெரியதுரை, மதிமாரிமுத்து, கிறிஸ்டோபர், பூசைப்பாண்டியன், சேர்மத்துரை, ராமச்சந்திரன், நகர செயலாளர் புளியங்குடி எ.அந்தோணிசாமி, பேரூர் கழகச் செயலாளர்கள் குருசாமி, மாரிமுத்து, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.எம்.எஸ். முகேஷ், சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி சரவணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சரவணன், கார்த்தி, ராஜ், ராஜராஜன், அன்சாரி, மணிகண்டன் மற்றும் செந்தில், ஜெயகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தாமரைக் குளம் கிராமத்தில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி



**அரியலூர் : ஜன. 20,**

**தாமரைக் குளம் கிராமத்தில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி நடைபெற்றது.**

இது பற்றி, அரியலூர் வேளாண்மை உதவி இயக்குனர் சாந்தி வெளியிட்ட செய்தி குறிப்பு : அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டாரத்துக்கு உட்பட்ட, தாமரைக் குளம் கிராமத்தில், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் கீழ், எண்ணை வித்து பயிரான எள் பயிரில், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை சாகுபடி குறித்து, மாவட்டத்திற்குள்ளான விவசாயிகள் பயிற்சி, கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்ட கிராமமான தாமரை குளத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு, வேளாண்மை துணை இயக்குனர் (மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்) பூவலிங்கம் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் ஆ.சாந்தி வரவேற்று பேசினார். கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் மலைவாசன் சிறப்புரையாற்றினார். உதவி வேளாண்மை அலுவலர் அருட்செல்வி, அட்மா திட்ட உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் அன்பழகன், வசந்தி, மற்றும் விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டியில் நற்சாந்துபட்டி இராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் சாதனை



**நற்சாந்துபட்டி : ஜன. 20,**

**மாநில அளவிலான பாரதியார் தின குத்துச்சண்டை போட்டிகள் தர்மபுரி மாவட்டம் சப்தகிரி பொறியியல் கல்லூரியில் ஜனவரி 10ம் தேதி முதல் 13ம் தேதி வரை நடைபெற்றது.**

இதில் 38 மாவட்டங்களைச் சேர்ந்த பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் நற்சாந்துபட்டி இராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் 4 பேர் வெற்றி பெற்றுள்ளனர். 19 வயதிற்கு உட்பட்டோர் பிரிவில் 12ம் வகுப்பு மாணவி எஸ்.சரண்யா 48 கிலோ எடை பிரிவில் தங்கப்பதக்கமும், 10ம் வகுப்பு மாணவி வி.முகிலா 51 கிலோ எடைபிரிவில் வெள்ளிப்பதக்கமும், 17 வயதிற்கு உட்பட்டோர் பிரிவில் 9ம் வகுப்பு மாணவி வி.யஷ்வினி 44 கிலோ எடைபிரிவில் வெள்ளிப்பதக்கமும், 10ம் வகுப்பு மாணவன் கே.பாலவிக்னேஷ் 52 கிலோ எடைபிரிவில் வெண்கலப்பதக்கமும் பெற்றனர். வெற்றி பெற்றவர்களை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், பள்ளிச் செயலர், பள்ளித் தலைமையாசிரியர், உடற்கல்வி இயக்குநர் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினார்கள்.

# சிராவயல் மஞ்சுவிரட்டில் பலியான 2 பேரின் குடும்பத்துக்கு தலா ரூ. 3 லட்சம் நிவாரண நிதி : அமைச்சர் பெரியகருப்பன் வழங்கினார்

**சிவகங்கை : ஜன. 20,**

**சிவகங்கை மாவட்டம் சிராவயல் மஞ்சுவிரட்டில் பலியான 2 பேரின் குடும்பத்துக்கு தலா ரூ.3 லட்சம் நிவாரண நிதியை அமைச்சர் பெரியகருப்பன் வழங்கினார்.**

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சிராவயல் ஊராட்சியில் கடந்த 17ம் தேதி மஞ்சுவிரட்டுப் போட்டி நடைபெறும் இடத்திற்கு வெளியே காளை முட்டி சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சிராவயல் ஊராட்சி, மருதங்குடி கிராமத்தைச் சேர்ந்த மணிமுத்து (35) மற்றும் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கே.வளையப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 11 வயது சிறுவன் பாஸ்கரன் ஆகிய இருவரும் எதிர்பாராதவிதமாக படுகாயம் அடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் இரங்கல் தெரிவித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ஆறுதல் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 லட்சம் வழங்க உத்தரவிட்டிருந்தார். அதன்படி, 11 வயது சிறுவன் பாஸ்கரன், மணிமுத்து (35) குடும்பத்தினரிடம் ரூ.3 லட்சத்துக்கான காசோலையை அமைச்சர் பெரியகருப்பன் வழங்கினார். 2 பேரின் குடும்பத்துக்கும் தனது சார்பிலும் தலா ரூ.1 லட்சம் நிதியை அமைச்சர் பெரியகருப்பன் வழங்கினார்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் பிரசித்தி பெற்ற இரண்டாவது குரு ஸ்தலமாக விளங்கும் நாமபுரீஸ்வரர் கோவிலில் சூரிய பகவான் தன் ஒளிக் கதிர்களால் சிவபெருமானை வணங்கும் அற்புத நிகழ்வு.

# ஆலங்குடியில் சமத்துவ பொங்கல் விழா



**ஆலங்குடி : ஜன. 20,**

**புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி ஜாகிர் உசேன் தெருவில் நட்சத்திர நண்பர்கள் சார்பில் 10ம் ஆண்டு சமத்துவ பொங்கல் விழா, விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு விழா நடைபெற்றது.**

நிகழ்ச்சியில் நட்சத்திர நண்பர்களின் கொடியினை ஆலங்குடி பேரூராட்சி மன்ற தலைவர் ராசி முருகானந்தம் ஏற்றி வைத்து விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார். பானை உடைத்தல், கோலப்போட்டி, சிலம்பாட்டம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றது. சமத்துவ பொங்கல் விழாவை சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தொடங்கி வைத்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

விழாவில் திமுக ஒன்றிய கழக செயலாளர் தங்கமணி, முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் மனமோகன், கவிஞர் ரமா. ராமநாதன், நகர செயலாளர் பழனி குமார், துணை செயலாளர் செங்கோல், கவுன்சிலர்கள் சையது இப்ராஹிம், லெட்சுமணன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். நட்சத்திர நண்பர்கள் கலந்து கொண்ட பட்டிமன்ற நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஆலங்குடி நட்சத்திர நண்பர்கள் செய்திருந்தனர்.

# அசாம் முதல்வரின் கைது மிரட்டல் அச்சமின்றி சவாலை ஏற்பதாக காங்கிரஸ் பதிலடி

**புதுடெல்லி : ஜன. 20,**

**இந்திய ஒற்றுமை நியாய யாத்திரையில் பங்கேற்கும் இரு தீய சக்திகளை கைது செய்யப்போவதாக அசாம் முதல்வர் ஹேமந்த பிஸ்வா சர்மா கூறியிருப்பதற்கு, 'அச்சமில்லை. சாவலை ஏற்கிறோம்' என்று காங்கிரஸ் கட்சி பதிலடி கொடுத்துள்ளது.**

இது குறித்து காங்கிரஸின் தகவல் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறுகையில், "கடந்த இரண்டு நாட்களாக வடகிழக்கு மாநிலத்தில் ராகுல் காந்தியின் நியாய யாத்திரைக்கு கிடைத்த ஆதரவைப் பார்த்து அசாம் முதல்வர் பதற்றமடைந்திருக்கிறார்.

மேலும், "அசாமின் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த அனைத்து மக்களும், எல்லா வயதினரும் ராகுல் காந்திக்கு உற்சாகமாக வரவேற்பு அளிக்கின்றனர். இந்த இரண்டு நாளில் யாத்திரைக்கு கிடைத்த ஆதரவைப் பார்த்து மாநில முதல்வர் பதற்றமடைந்துள்ளது தெளிவாக தெரிகிறது.

அசாம் முதல்வர் அவதூறு பரப்பலாம், துஷ்பிரயோகம் செய்யலாம், மிரட்டலாம். ஆனால் நாங்கள் எந்த மிரட்டலுக்கும் அஞ்சமாட்டோம். இந்திய ஒற்றுமை நியாய யாத்திரைக்கு கிடைத்த பெரிய ஆதரவால் அவர் கலக்கமடைந்துள்ளார். யாத்திரையை தடம் புரளச் செய்யும் அசாம் முதல்வரின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு மத்தியில் இன்னும் 6 நாட்கள் யாத்திரை அசாமில் தொடர இருக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இந்த யாத்திரை குவாஹாத்தி வழியாக செல்லுமா என்று அசாம் முதல்வரிடம் கேட்கப்பட்டதற்கு பதில் அளித்த ஹேமந்த பிஸ்வா சர்மா, "நகரில் மருத்துவக் கல்லூரி, மருத்துவமனைகள் இருப்பதால் யாத்திரை நகருக்குள் செல்ல வேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் கேட்டுக்கொண்டால் மாற்று வழியில் செல்ல நாங்கள் அனுமதி வழங்குவோம். ஒருவேளை காங்கிரஸ் யாத்திரை அனுமதியில்லாமல் குவாஹாத்திக்குள் நுழைந்தால் அவர்கள் மீது எந்த வழக்கும் பதிவு செய்யப்படாது. நான் தேவையில்லாமல் அவர்களுக்கு தேசிய அளவில் வெளிச்சம் தர விரும்பவில்லை. மக்களவைத் தேர்தல் முடிந்து 3 - 4 மாதங்களுக்கு பின்னர் யாத்திரையில் பங்கேற்கும் இரு தீய சக்திகள் மீது வழக்கு பதிவு செய்யப்படும்" என்று தெரிவித்தார். தன்னுடைய இலக்கு யார் என்பது குறித்து அவர் எதுவும் கூறவில்லை.



முதல்வரின் இந்த பேச்சு குறித்து கருத்து தெரிவித்துள்ள ஜெய்ராம் ரமேஷ், "அசாம் முதல்வர், மக்கள் இந்திய ஒற்றுமை நியாய யாத்திரையில் பங்கேற்பதை தடுக்க அனைத்து முயற்சிகளையும் செய்கிறார். யாராலும் இந்த யாத்திரையைத் தடுக்க முடியாது. நாங்கள் இன்னும் சில நாட்கள் அசாமில் தான் இருப்போம். அவர்கள் எங்களை கைது செய்யட்டும், நாங்கள் சவாலை ஏற்கிறோம்" என்று கூறினார்.

அசாம் முதல்வரின் கருத்துக்கு பதில் அளித்துள்ள காங்கிரஸ் கட்சியின் கவுரவ் கோகாய், "மக்கள் எங்களுடன் இருக்கிறார்கள். நாங்கள் யாருக்கும், எந்த வழக்குக்கும் அஞ்சப்போவதில்லை. ஜனநாயகத்தில் எந்த ஓர் அரசும் எங்களைத் தடுக்க முடியாது" என்று தெரிவித்தார்.

முன்னதாக வியாழக்கிழமை அசாமில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, "இந்தியாவிலேயே ஊழல் மிகுந்த அரசும், முதல்வரும் கொண்ட மாநிலம் அசாம் மாநிலம்" என்று கடுமையான விமர்சனத்தை முன்வைத்திருந்தார். அதற்கு பதிலடி கொடுத்த அசாம் முதல்வர், "அது நியாய யாத்திரை இல்லை. அது மியா யாத்திரை. எங்கெல்லாம் முஸ்லிம்கள் இருக்கிறார்களோ, அங்கே கூட்டம் இருக்கும். முஸ்லிம்கள் இல்லாத இடத்தில் கூட்டம் இருக்காது. அவர்களின் பெண்கள் கூட வெளியே வரமாட்டார்கள். ஆண்கள் மட்டுமே இருப்பார்கள். அசாமில் அது பெண்கள் இல்லாத மியா யாத்திரையே. இந்த யாத்திரையில் சில பல மியாக்கள் பங்கேற்கும் நிலையில், அதற்கு நான் அதிக முக்கியத்துவம் கொடுக்க விரும்பவில்லை" என்று தெரிவித்திருந்தார்.

# ஆலங்குடி அருகே முக்காணிப்பட்டியில் நடைபெற்ற ஜல்லிக்கட்டில் 17 பேர் காயம்



**ஆலங்குடி : ஜன. 20,**

**ஆலங்குடி அருகே முக்காணிப்பட்டியில் நடைபெற்ற ஜல்லிக்கட்டில் காளைகள் முட்டி 17 பேர் காயமடைந்தனர்.**

புதுக்கோட்டை மாவட்டம் முக்காணிப்பட்டியில் பொங்கல் விழாவையொட்டி ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது. போட்டியை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன் தொடங்கி வைத்தார். தொடர்ந்து, வாடிவாசலில் இருந்து கோயில் காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. இதையடுத்து புதுக்கோட்டை, திருச்சி, திண்டுக்கல், மதுரை, தஞ்சாவூர், சிவகங்கை, இராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 610 காளைகள் அவிழ்த்துடப்பட்டன. 7 குழுக்களாக 175 மாடுபிடி வீரர்கள் களமிறக்கப்பட்டனர்.

வாடிவாசலில் இருந்து சீறிப்பாய்ந்து வந்த காளைகளை வீரர்கள் தீரத்துடன் அடக்கினர். அப்போது, காளைகள் முட்டியதில் 17 பேர் காயமடைந்தனர். அவர்களுக்கு அங்கு தயார் நிலையில் இருந்த மருத்துவக் குழுவினர் சிகிச்சை அளித்தனர். அதில், பலத்த காயமடைந்த ஒருவர் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். காளைகளை அடக்கிய வீரர்களுக்கும், பிடிபடாத காளைகளின் உரிமையாளர்களுக்கும், பாத்திரங்கள், மிதிவண்டிகள், பீரோ, கட்டில் உள்ளிட்ட பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன. புதுக்கோட்டை மாவட்டம் ஏ.மாத்தூரைச் சேர்ந்த கவாஸ்கர், 24 காளைகளை அடக்கி சிறந்த மாடுபிடி வீரராகவும், கடுக்காகாடு கிராமத்தைச் சேர்ந்த பிரின்ஸ் என்பவரின் காளை சிறந்த காளையாகவும் தேர்வு செய்யப்பட்டன. அவர்கள் இருவருக்கும் தலா ஒரு மோட்டார் சைக்கிள் பரிசளிக்கப்பட்டன. புதுக்கோட்டை காவல் துணைக் கண்காணிப்பாளர் ராகவி தலைமையில் 200-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# பாரதிய ஜனதா கட்சியின் தென்சென்னை மாவட்டம் சார்பாக தமிழர் திருநாள் பொங்கல் விழா





**சென்னை : ஜன. 20,**

**தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியின் தென்சென்னை மாவட்டம், தியாகராய நகர் மேற்கு மண்டல நிர்வாகிகள் மற்றும் 130வது வட்டத்தின் சார்பாக, தமிழர் திருநாள் பொங்கல் விழா அம்பிகா ஓட்டல் பின்புறம், 100 அடி சாலை, கன்னியப்பா தெருவில் 130வது வட்டத் தலைவர் மற்றும் அரசியல் பிரிவு மண்டல பொறுப்பாளர் வடபழனி எஸ்.துலுக்கானம் தலைமையில் நடைபெற்றது.**

இந்த விழாவில், மாவட்ட தலைவர் வே.காளிதாஸ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பொங்கல் விழாவினை நூற்றுக்கும் மேற்பட்ட மகளிர் பொங்கல் வைத்து கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்த விழாவில், மாவட்ட பொதுச்செயலாளர் டி.அரவிந்த்ராஜ், மாவட்ட செயலாளர் டி.உமாசங்கர், மண்டல தலைவர் ஆர். வெங்கடேஷ், மத்திய அரசு நலத்திட்ட பிரிவு மாவட்டத் தலைவர் கோடம்பாக்கம் செந்தில்குமார், மாவட்ட துணைத் தலைவர் வடபழனி ராஜா ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் 130 வது வட்ட கிளைச் செயலாளர் ரமேஷ் ராகவன் சிறப்பாக செய்திருந்தார்.

# மேல்மருவத்தூர் ஆன்மிக மக்கள் தொண்டு இயக்கம் சார்பில் தமிழர் திருநாள் பொங்கல் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பரிசளிப்பு விழா



**மேல்மருவத்தூர் : ஜன. 20,**

**செங்கல்பட்டு மாவட்டம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் ஆன்மிக மக்கள் தொண்டு இயக்கம் சார்பில் ஆன்மீக குரு பங்காரு அடிகளாரின் 84 ஆம் ஆண்டு அவதார திருநாளை முன்னிட்டு மதுரை மாவட்ட ஆன்மீக மக்கள் தொண்டு இயக்கம் சார்பில் ஆன்மீக மக்கள் தொண்டு இயக்கத்தின் தலைவர் கோ.ப.அன்பழகன் தலைமையில் கிறிஸ்மஸ், புத்தாண்டு, மற்றும் தமிழர் திருநாள் பொங்கல் விழா நடைபெற்றது.**

இவ்விழாவில் மேல்மருவத்தூர் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து 100க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர். ஓட்டப்பந்தயம், தொடர் ஓட்டம், கபடி, கைப்பந்து, குண்டு எறிதல், கபடி, கிரிக்கெட் என பல்வேறு போட்டிகள் நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு ஆன்மீக மக்கள் தொண்டு இயக்கத் தலைவர் கோ.ப.அன்பழகன் மற்றும் மேல்மருவத்தூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அகத்தியன் பரிசுகளை வழங்கினர்.

# புதுக்கோட்டை வாசகர் பேரவை சார்பில் தலைமைத்துவம் அறிவோம் கருத்தரங்கம்



**புதுக்கோட்டை : ஜன.20,**

**புதுக்கோட்டை கைக்குறிச்சி ஸ்ரீ பாரதி மகளிர் கலை அறிவியல் கல்லூரி மற்றும் புதுக்கோட்டை வாசகர் பேரவையும் இணைந்து, ஸ்ரீபாரதி மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் "தலைமைத்துவம் அறிவோம்" என்ற கருத்தரங்கம் நடத்தியது.**

கருத்தரங்கத்திற்கு ஸ்ரீபாரதி மகளிர் கல்லூரி தலைவர் கு.தனசேகரன் தலைமை வகித்தார். இணைப்பாடத்திட்டம் தொடர்பாக டெல்லி கல்விக் கருத்தரங்கிலும் மற்றும் சண்டிகார் பல்கலைக்கழகத்திலும் விருது பெற்ற கவிஞர் தங்கம்மூர்த்திக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. அப்போது உரையாற்றிய ஞானாலயா பா.கிருஷ்ணமூர்த்தி. ஏழைக்கு எழுத்தறிவித்தல் மிகச்சிறந்த செயல் என்றான் பாரதி."சாதிப் பெயர்களை ஒழிக்க வேண்டுமென்றால் ஒவ்வொரு பெயரோடும் பாரதியின் பெயரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்றார் கண்ணதாசன். பாரதியைப்போல் தன் மனைவிக்கு உண்மையாக இருந்தவர்கள் வேறு யாருமில்லை.

இங்கர்சால் போன்ற சிறந்த நாத்திகர்கள் யாருமில்லை. அவரைபோல கொள்கைப்பிடிப்புடைய மனிதனும் யாருமில்லை. அமெரிக்க குடியரசுதலைவர் தேர்தலில். நாத்திகக் கொள்கையை விட்டுவிடு உனக்கு வாக்களிக்கிறோம் என்றபோது, அதற்கு உடன்படாமல் தோல்வியைத் தழுவியவர் அவர். உலகத்தை வெல்லுவேன்என்றுசொன்ன நெப்போலியனைவிட, மகிழ்ச்சியோடு, குடும்பத்தோடு இருக்கும் சாராரண மனிதன் உயர்ந்தவன் என்றார் இங்கர்சால். ஆங்கிலேய ஏகாதிபத்தியம் வேண்டுமா, சேக்ஸ்பியர் வேண்டுமா என்றபோது மெக்காலே சேக்ஸ்பியர் என்றான். அதைவிடப் பெருமைப்படத்தக்க அளவில் ஔவையார் "சங்க இலக்கியங்கள் தா" என்றார்.

மேலும்தங்கம்மூர்த்தியின் வெற்றிக்கு, அவர் செய்திருக்கும் கல்விப்பணி, புன்னகை நிறைந்த முகம், அனைவரிடமும் காட்டும் அன்பு, குடும்பத்தில் காட்டும் அக்கறை மற்றும் அவரின் ஈகைக்குணமே என்றார். பின்னர், தலைமைத்துவம் என்ற தலைப்பில்உரையாற்றினார் கவிஞர் தங்கம் மூர்த்தி. அறந்தாங்கி அருகில் சுப்பிரமணியபுரம் என்ற குக்கிராமத்தில் பிறந்த நான் வெற்றிகரமாக 25 ஆண்டுகளைக் கடந்து வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளியைநடத்திவருவதற்கு கீழ்கண்ட என்னிடம் உள்ள அல்லதுஒவ்வொருவருக்கும் தேவையான கீழ்கண்ட பண்புகளைக்குறிப்பிடலாம். வெற்றியாளர்களாக முதலில் அவமானங்களைத் தாங்கிக்கொள்கிற பக்குவம் இருக்க வேண்டும். வெற்றியாளர்கள் அவமானங்களைப்புறந்தள்ளி கொண்டுலட்சியத்தில்நின்று வெற்றிபெற்றவர்கள் தாம்.

ஆங்கிலத்தில் எனக்கு மிகப்பெரிய பரிச்சயம் இல்லை என்றாலும் அதை முழுமையாக கற்றுக் கொள்வதற்கான முயற்சியில் தளரவில்லை. ஆங்கிலத்தை முழுமையாக அறிய ஓராண்டு முழுவதும் ஆங்கிலப் பத்திரிக்கைகளை மட்டுமே வாசித்தேன். தளராத முயற்சியில் வெற்றி பெற்றேன்.

எதையும் அழகாக, நேர்த்தியாக செய்ய வேண்டும் என்பதில் அக்கறை வேண்டும். அது என்னிடம் எப்போதும் உண்டு. சொர்க்கம் என்பது பூரணத்துவமான செயல்பாட்டில் உள்ளது என்பார்கள். நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் அழகாக, நேர்த்தியாக செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். தொடர்ந்து கற்கும் பழக்கம் வேண்டும். முயற்சியையும், பயிற்சியையும் எப்போதும் விட்டுவிடக்கூடாது. மற்றவர்களின் விமர்சனங்களைப் புறந்தள்ளி, நாம் செய்யும் செயலைமட்டுமேதொடர்ந்து எடுத்துச் செல்லவேண்டும்.

குடும்பம் மிகவும் முக்கியம். அதை மகிழ்ச்சியானதாக வைத்துக்கொள்ள வேண்டும். கற்ற கல்வி ஒருபோதும் கைவிடாது. மேலும் வெற்றிக்கு அவசியத் தேவை தொடர் புத்தக வாசிப்பு. மேற்கண்ட பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள் வெற்றியாளராகுங்கள் என்று மாணவிகளைக் கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சியில் வாசகர் பேரவை ஆலோசகர்கள் ,சத்தியராம்ராமுக்கண்ணு, அ.லெ.சொக்கலிங்கம், சுதந்திரராஜன், பேரா. மு.பாலசுப்பிரமணியன், கவிஞர் பீர்முகமது ஆகியோரும் கலந்து கொண்டனர். முன்னதாக கல்லூரி முதல்வர் கவிதா வரவேற்புரையாற்றினார். வாசகர் பேரவைச் செயலர் அறிமுகவுரை ஆற்றினார். நிறைவாக பேரா. உஷா நந்தினி நன்றி கூறினார்.



▶ முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்வளர்ச்சித்துறை சார்பில் நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணக்கர்களுக்கான பரிசு மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெ. குமாரவேல் பாண்டியன், ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கினார். இந்நிகழ்வின் போது தமிழ் வளர்ச்சித்துறை துணை இயக்குநர் முனைவர் ப.நாகராசன் உடன் உள்ளார்.

# ஆத்துப்பாக்கம் கிராமத்தில் மத்திய அரசின் சாதனை விளக்க கூட்டம்



**ஊத்துக்கோட்டை : ஜன. 20,**

**திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், ஆத்துப்பாக்கம் கிராமத்தில் மத்திய அரசின் சாதனைகள் குறித்த விளக்க கூட்டம் நடைபெற்றது.**

இதில், பாஜக தேசிய கவுன்சில் உறுப்பினர் ராமசாமி, மாநில துணைத்தலைவர் டால்பின் ஸ்ரீதர், மாநில செயலாளர் சதீஷ், திருவள்ளூர் மாவட்ட பாஜக துணைத்தலைவர் ஏனம்பாக்கம் ஜெ.ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். எல்லாபுரம் கிழக்கு, மேற்கு மண்டல தலைவர்கள் ஜெயபிரகாஷ், சுதாகர் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

இக்கூட்டத்தில்,சிறப்பு அழைப்பாளராக பாஜக தேசிய எஸ்.டி பிரிவு தலைவரும், ஜார்கண்ட் மாநில எம்பியுமான சமீர் ஓரான் கலந்து கொண்டு மோடி அரசின் சாதனைகள் குறித்து சிறப்புரையாற்றி பேசினார். மேலும், மத்திய அரசு கொண்டு வந்த பிரதமரின் ஆயுஷ்மான் திட்டம், சமூக பாதுகாப்பு திட்டம், விவசாயிகள் நலன், உணவு பாதுகாப்பு, செல்வமகள் சேமிப்பு திட்டம் உள்ளிட்ட 200-க்கும் மேற்பட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக பொதுமக்களிடம் எடுத்து கூறினார். இதில், சிந்தனையாளர் பிரிவு மாநில செயலாளர் மகாலட்சுமி, மாவட்ட ஊடகப் பிரிவு செயலாளர் புருஷோத்தமன், மாநில துணைத்தலைவர் சவுந்தர் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள், பல்வேறு துறையைச் சேர்ந்த அரசுத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



▶ அஇஅதிமுக நிறுவனர் எம்.ஜி.ஆர். பிறந்த நாளை முன்னிட்டு படத்திற்கு அதிமுக சென்னை வியாசர்பாடி பகுதி துணை செயலாளர் சந்தோஷ்மேரி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

# சீர்காழி அருகே அன்னை அஜ்மத் பீவி தர்ஹா 83வது ஆண்டு சந்தனக்கூடு கந்தூரி விழா



**சீர்காழி : ஜன. 20,**

**மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே மேலச்சாலையில் அன்னை அஜ்மத் பீவி தர்ஹா அமைந்துள்ளது. இங்கு ஆண்டுதோறும்சந்தனக்கூடு விழா வெகுவிமர்சியாக நடைபெறுவது வழக்கம். அதேபோல் இந்த ஆண்டு கடந்த ஜனவரி 12 ம் தேதி கொடியேற்றத்துடன் கந்தூரிவிழா தொடங்கியது.**

அதனை தொடர்ந்து ஒருவார காலம் சிறப்பு பாத்தியாக்கள் ஓதப்பட்டு முக்கிய நிகழ்ச்சியான 83 வது ஆண்டு சந்தனக்கூடு வைபவம் விடியற்காலை 3.30 மணிக்கு சந்தனம் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு அன்னை அஜ்மத் பீவி தர்ஹாவில் சந்தனம் பூசும் வைபவம் சிறப்புத்துவா ஓதி வழிபாடு நடைபெற்றது.

இதில் சென்னை, புதுக்கோட்டை, தஞ்சை, நாகை, திருவாரூர், கடலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், ஆந்திரா கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் சீடர்கள், பங்கேற்றனர். இந்த விழாவில் மத சார்பற்று அனைத்து மதத்தினரும் திரளாக கலந்துக்கொண்டு வழிபாடு செய்தனர். மேலும் வைத்தீஸ்வரன் கோவில் போலீஸார் 30க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# கலிங்கா சூப்பர் கோப்பை கால்பந்து போட்டியில் சென்னையின் எப்.சி.அணி, கோகுலம் கேரளாவை வீழ்த்தியது



**புவனேஸ்வர் : ஜன. 20,**

**கலிங்காசூப்பர் கோப்பை கால்பந்து தொடரின் 4-வது சீசன் கடந்த 9-ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.**

இதில் ஐஎஸ்எல் தொடரிலிருந்து 12 மற்றும் ஐ லீக்கிலிருந்து4என்றுமொத்தம் 16 அணிகள் பங்கேற்றுள்ளன. இவை 4 குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்களது பிரிவில் இடம்பெற்றுள்ள மற்ற அணிகளுடன் தலா ஒருமுறை மோதும். லீக் சுற்று முடிவில் தங்களது பிரிவுகளில் முதலிடத்தை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

இதில் 'சி' பிரிவில் இடம்பெற்றுள்ள சென்னையின் எப்.சி. தனது முதல் ஆட்டத்தில் பஞ்சாப் அணியுடன் டிரா செய்தது. இந்நிலையில் சென்னையின் எப்.சி. தனது 2-வது ஆட்டத்தில் கோகுலம் கேரளா அணியுடன் மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென்னையின் எப்.சி. 2-0 என்ற கோல் கணக்கில் கோகுலம் கேரளா அணியை வீழ்த்தி இந்த தொடரில் தனது முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது. சென்னை அணி தரப்பில் கானர் ஷீல்ட்ஸ் மற்றும் இர்பான் யாத்வாட் ஆகியோர் தலா 1 கோல் அடித்தனர். சென்னையின் எப்சி அணி தனது அடுத்த ஆட்டத்தில் மும்பை எப்சி அணியை சந்திக்க உள்ளது.

# சோழவரம் ஒன்றியம் வெள்ளிவாயல் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட நிகழ்ச்சி



**ஊத்துக்கோட்டை : ஜன. 20,**

**திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம் வெள்ளிவாயல் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட நிகழ்ச்சி நடைபெற்றது.**

இந்நிகழ்ச்சியில், சோழவரம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ராஜாத்தி செல்வசேகரன், சோழவரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராமகிருஷ்ணன், பார்த்தசாரதி, வெள்ளிவாயல் ஊராட்சிமன்ற தலைவர் சதா, ஒன்றிய கவுன்சிலர் சகிலா சகாதேவன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வடிவேல் ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர்.

இத்திட்டத்தில் பட்டா, முதியோர் உதவி தொகை, கடன் உதவி, மக்களின் அடிப்படைத் தேவைகளை தீர்க்கும் வகையில் வருவாய், மருத்துவம், காவல் உள்ளிட்ட 13 அரசு துறைகளைச்சேர்ந்த அதிகாரியிடம் பொதுமக்கள் தங்களது கோரிக்கை மனுக்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில், சோழவரம் வட்டார வளர்ச்சி மேலாளர் சுபதாஸ், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் காமேஸ்வரி, வெள்ளிவாயல் ஊராட்சிமன்ற செயலர் கிருபா, ஏழுமலை, வார்டு உறுப்பினர்கள் செந்தில், ஜெயசீலன், சித்ரா, குமரேசன், மற்றும் அனைத்து துறை அதிகாரிகள், கிராம பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திருக்கடையூரில் 44ஆம் ஆண்டு குதிரை எல்கைப்பந்தயம் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா முருகன் துவங்கி வைத்தார்



**திருக்கடையூர் : ஜன. 20,**

**மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, திருக்கடையூரில் பொங்கல் பண்டிகையையொட்டி தில்லையாடி கோ.உத்திராபதியார் 44-ம் ஆண்டு, கி.நாராயணசாமி 11-ம் ஆண்டு நினைவு மாடு, குதிரை எல்கைப் பந்தயம் சிறப்பாக நடைபெற்றது.**

திருக்கடையூரில் தொடர்ந்து ஆண்டு தோறும் காணும் பொங்கல் நாளன்று திருக்கடையூர், தில்லையாடி, டி.மணல்மேடு, பிள்ளைப்பெருமாள் நல்லூர், மாணிக்கப்பங்கு, காழியப்பநல்லூர், கிள்ளியூர் ஆகிய 7 ஊராட்சிகள் மற்றும் தரங்கம்பாடி பேரூராட்சி சார்பில் மாடு, குதிரை வண்டிகளுக்கான எல்கைப் பந்தயம் நடத்தப்படுவது வழக்கம்.

இந்த ஆண்டு காணும் பொங்கல் நாளான வியாழக்கிழமை அன்று தியாகி வள்ளியம்மை நுழைவு வாயில் அருகே நடைபெற்ற பந்தய தொடக்க நிகழ்ச்சிக்கு, திருக்கடையூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயமாலதி சிவராஜ் தலைமை வகித்தார். பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு போட்டிகளை தொடங்கி வைத்தார். திருக்கடையூர்-தரங்கம்பாடி தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 10 கி.மீ தொலைவுக்கு காலை தொடங்கி மாலை வரை பந்தயம் நடைபெற்றது.

எல்கை பந்தியத்தில் சிறிய மாடு, நடு மாடு, பெரிய மாடு, கரிச்சான் குதிரை, நடு குதிரை, பெரிய குதிரை என பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், காரைக்கால், கடலூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்தும் போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் சாலையின் இருபுறங்களிலும் நின்று பந்தயத்தை பார்த்து ரசித்தனர். காணும் பொங்கல் நாள் என்பதால் தரங்கம்பாடி கடற்கரைக்கு அதிக மக்கள் வந்திருந்ததால் போட்டியை காண்பதற்கு கூட்டம் அதிகமாக இருந்தது. வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பூம்புகார் எம்எல்ஏ நிவேதா எம். முருகன் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற தலைவர் சுகுண சங்கரி குமரவேல், விழாக்குழுத் தலைவரும், திமுக மத்திய ஒன்றியச் செயலாளருமான அமுர்த. விஜயகுமார், விழா நிர்வாகி பாலசுப்ரமணியன், தஞ்சை மண்டல தகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர் பிஎம். ஸ்ரீதர், ஒன்றிய செயலாளர் எம். அப்துல்மாலிக், தரங்கை பேரூர் செயலாளர் முத்துராஜா, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பொன்.ராஜேந்திரன், டி மணல்மேடு ஊராட்சி மன்ற தலைவர் திலகவதி துரைராஜ் மற்றும் பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளின் தலைவர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பல்வேறு அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கோட்டுச்சேரி ராயன்பாளையம் கிராமத்தில் வாக்களிப்பது குறித்து விழிப்புணர்வு கோலப்போட்டி



**காரைக்கால் : ஜன. 20,**

**2024-லில் இந்தியாவில் நடக்கவிருக்கும்நாடாளுமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு பொதுமக்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுருத்தி வண்ணக் கோல போட்டிகள் நடத்தப்பட்டன.**

காரைக்கால்பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்றது. அங்கன்வாடி பணியாளர் லாவன்யா மற்றும் கிராம மகளிர்கள் ஒன்றிணைந்துபலவகையான வண்ணக்கோலங்களை வரைந்தனர். இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது, பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியின் அனைத்து ஏற்பாடுகளையும் இ.எல்.சி. ஒருங்கிணைப்பாளர் செந்தில்வேல் மற்றும் என். எஸ்.எஸ். திட்ட அலுவலர் மேகநாதன், ஜெயபிராகஷ் செய்திருந்தனர்.



வரலாறு உலகம்

# ஈரான் பகுதிகளில் பாகிஸ்தான் போர் விமானங்கள்

## குண்டுவீசி தாக்குதல்



**இஸ்லாமாபாத் : ஜன. 20,**

**ஈரான் பகுதிகளில் பாகிஸ்தான் போர் விமானங்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை குண்டுவீசி தாக்குதல் நடத்தின.**

சன்னி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பாகிஸ்தானுக்கும், ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஈரானுக்கும் இடையே அவ்வப்போது மோதல் ஏற்பட்டு வருகிறது. கடந்த டிசம்பரில் ஈரானின்சிஸ்தான் பகுதியில் பாகிஸ்தானை சேர்ந்த ஜெய்ஷ் அல்-தும் என்ற சன்னி தீவிரவாத அமைப்பு தாக்குதல் நடத்தியது. இதில் ஈரான் ராணுவ மூத்த தளபதி உட்பட 11 வீரர்கள் உயிரிழந்தனர்.

இதற்குபதிலடியாககடந்த 16-ம் தேதி பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணம், பஞ்ச்கூர் பகுதியில் ஜெய்ஷ் அல்-தும் தீவிரவாத முகாமை குறிவைத்து ஈரான் ராணுவம் ஏவுகணை மற்றும் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. இதையடுத்து, தனது நாட்டிலிருந்த ஈரான் தூதரை வெளியேற்றியது பாகிஸ்தான். அதோடு பாகிஸ்தான் போர் விமானங்கள் மற்றும் ட்ரோன்கள் ஈரானின் தென் கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின.

இதுகுறித்து பாகிஸ்தான் ராணுவ வட்டாரங்கள் கூறும்போது, "ஈரானின் தென்கிழக்கு பகுதியில் சுமார் 50 கி.மீ. தொலைவு வரை ஊடுருவிய எங்களது போர் விமானங்கள், பலுசிஸ்தான் தீவிரவாதிகளின் 7 முகாம்கள் மீது குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. இதில் ஏராளமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்" என்றன.

ஈரான் வெளியுறவுத் துறை கூறும்போது, பாகிஸ்தான் தாக்குதலில் 4 குழந்தைகள், 3 பெண்கள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. ஈரானில் செயல்படும் பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளை, ஈரான் வெளியுறவுத் துறை நேற்று முன்தினம் வியாழக்கிழமை நேரில் வரவழைத்து கடுமையாக எச்சரிக்கை விடுத்தது.

# தெற்கு காசாவில் இஸ்ரேல் விமானப்படை தாக்குதலில் 16 பேர் பலி



**ரபா : ஜன. 20,**

**பிரான்ஸ் மற்றும் கத்தாரின் தலையீட்டால் பிணைக்கைதிகளுக்கு தேவையான மருந்து பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன.**

இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான போர் 100 நாட்களை கடந்து நீடித்து வரும் நிலையில், காசாவில் இஸ்ரேல் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலையில் தெற்கு காசாவின் ரபா நகரில் இஸ்ரேல் விமானப்படை விமானங்கள் குண்டு வீசின. இதில் 16 பேர் உயிரிழந்தனர். இதில் பாதிக்கு மேற்பட்டோர் குழந்தைகள் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானங்கள் மூலம் குண்டுவீசியும், ராணுவத்தினர் தரைவழி தாக்குதல் நடத்தியும் காசாவை தொடர்ந்து நிர்மூலமாக்கி வருகிறது இஸ்ரேல். அங்கு இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆயிரத்தை கடந்துவிட்டது. இதற்கிடையே ஹமாஸ் அமைப்பினரின் பிடியில் இருக்கும் இஸ்ரேல் பிணைக்கைதிகள் சிலர் நோயினால் அவதிப்பட்டு வருவது தெரியவந்துள்ளது. பிரான்ஸ் மற்றும் கத்தாரின் தலையீட்டால் அவர்களுக்கு தேவையான மருந்து பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன.

அவை காசாவை சென்றடைந்தது உறுதி செய்யப்பட்டு உள்ளது. ஆனால் பிணைக்கைதிகளிடம் சேர்க்கப்பட்டதா? என்பது உறுதி செய்யப்படவில்லை என கத்தார் கூறியுள்ளது.

# அமெரிக்க கோரிக்கையை புறக்கணித்ததாக அறிவித்தார்

## இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு



**இஸ்ரேல் : ஜன. 20,**

**கடந்த அக்டோபர் 7 அன்று தொடங்கிய இஸ்ரேல்-ஹமாஸ் போர் 100 நாட்களை தொடர்ந்து தீவிரமாக நடைபெற்று வருகிறது. பாலஸ்தீன காசா பகுதியில் வான் வழியாகவும், தரை வழியாகவும் இஸ்ரேலிய ராணுவ படை கடும் தாக்குதல்களை நடத்தி வருகிறது.**

சுமார் 25 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக பாலஸ்தீன சுகாதார துறை அறிவித்தது. போர்நிறுத்தம் அல்லது தற்காலிக போர்நிறுத்தம் குறித்து ஐ.நா. சபை, மனித உரிமை அமைப்புகள் மற்றும் பல உலக நாடுகளின் கோரிக்கையை இஸ்ரேல் புறக்கணித்தது. இப்போரில் இஸ்ரேலை அமெரிக்கா ஆதரிக்கிறது. சில தினங்களுக்கு முன், பாலஸ்தீனத்தை தனி நாடாக அறிவித்து சிக்கலை தீர்க்க வேண்டும் என அமெரிக்க வெளியுறவு துறை அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு போர் குறித்து கருத்து தெரிவித்தார். அப்போது அவர் கூறியதாவது: ஹமாஸ் அழிய வேண்டும். ஹமாஸ் அமைப்பினர் பிடித்து சென்ற பணய கைதிகள் மீண்டும் ஒப்படைக்க பட வேண்டும். எங்களுக்கு முழு வெற்றி கிடைக்கும் வரை போர் தொடரும். போர் இன்னும் சில மாதங்கள் நீடிக்கலாம்.

ஜோர்டான் நதிக்கு மேற்கே உள்ள நில பகுதி முழுவதிலும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் பாதுகாப்பாக இருக்க வேண்டும். இது பாலஸ்தீனத்தையும் சேர்த்தே குறிக்கும். இஸ்ரேலின் எதிர்காலம் என்பது தனி பாலஸ்தீனத்திற்கு எதிரானதுதான். இந்த உண்மையை அமெரிக்க நண்பர்களிடம் தெரிவித்து விட்டேன். இஸ்ரேலின் எதிர்கால பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்க கூடிய எந்த நிலைப்பாட்டையும் எங்கள் மீது திணிக்க முயல வேண்டாம் என கூறி விட்டேன் என்று நேதன்யாகு கூறினார்.

பணய கைதிகளை மீட்டு தனது நாட்டிற்கு கொண்டு வருவதற்குத்தான் நேதன்யாகு முன்னுரிமை தர வேண்டுமே தவிர, ஹமாஸை அழிப்பதில் காலம் கடத்த கூடாது என இது குறித்து அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# "மோடி இந்தியாவுக்கான மிகச்சிறந்த தலைவர்"

## அமெரிக்க பாடகி மேரி மில்பென் புகழாரம்



**வாஷிங்டன் : ஜன. 20,**

**பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவுக்கும், இந்திய - அமெரிக்க உறவுக்கும் மிகச்சிறந்த தலைவர் என்று அமெரிக்காவைச் சேர்ந்த நடிகையும் பாடகியுமான மேரி மில்பென் புகழாரம் சூட்டியுள்ளார்.**

பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் மேரி மில்பென் கூறியிருப்பதாவது: "அமெரிக்காவில் நரேந்திர மோடிக்கு மிகப்பெரிய ஆதரவு இருக்கிறது என்பதை நான் உறுதியாக சொல்வேன். அவர் மீண்டும் பிரதமராக தேர்ந்தெடுக்கப்படுவதை காண இங்கு பலரும் விரும்புகின்றனர். இந்தியாவுக்கான மிகச்சிறந்த தலைவர் அவர்.

இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும், ஏன் உலகத்துக்கே கூட இது முக்கியமான ஒரு தேர்தல் காலகட்டமாக இருக்கப் போகிறது என்று நான் நம்புகிறேன். குடிமக்களாக நம் அனைவருக்கும் ஒரு மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. இந்த தேர்தல் காலகட்டத்தில் உங்கள் குரல் கேட்கவேண்டும் என்றும், நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்றும் இந்தியாவில் இருக்கும் என் அன்புக்குரிய குடும்பங்களை நான் ஊக்குவிக்கிறேன்.

நான் பிரதமர் மோடியின் மிகப்பெரிய ஆதரவாளர் என்பதில் எந்த ரகசியமும் இல்லை. அது இந்தியாவில் உள்ள அனைவருக்கும் தெரியும். இந்தியாவும், இந்தியா - அமெரிக்கா இடையிலான உறவுக்கும் பிரதமர் மோடி மிகச்சிறந்த தலைவர் என்று நான் நம்புகிறேன். குடிமக்களாக நாட்டில் மாற்றத்தைக் கொண்டுவரும் சக்தி நம்மிடம் உள்ளது. அனைத்து மக்களுக்கும் ஏற்ற சிறந்த கொள்கைகளை கொண்டு வரும் அதிகாரம் நம்மிடம் உள்ளது. எனவே இந்த தேர்தல் காலத்தில் ஒவ்வொரு இந்திய குடிமகனும் தங்களின் குரலையும் வாக்கையும் ஓங்கி ஒலிக்கச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கான மோடியின் கொள்கைகள் நிச்சயமாக பெண்களை தலைமைத்துவத்தில் அதிகமாக ஊக்குவித்துள்ளன. திரவுபதி முர்மு குடியரசுத் தலைவராக உருவானது, மற்றும் அமைச்சரவையில் அதிக பெண் தலைவர்களை வந்ததற்கும் பலவழிகளில் அவர்தான் காரணம். அவர் மீண்டும் பிரதமராக தேர்ந்தெடுக்கப்படுவார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அதன் மூலம் அமெரிக்க - இந்திய உறவுகள் தொடர்ந்து பலப்படுத்தப்படும்" என்று கூறியுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் பிரதமர் மோடி அமெரிக்கா சென்றிருந்தபோது அந்த மேடையில், மேரி மில்பென் இந்திய தேசிய கீதமான 'ஜன கன மன' பாடி, பிரதமர் மோடியின் ஆசிர்வாதம் பெறுவதற்காக அவரது பாதம் தொட்டு வணங்கினார். இந்தக் காட்சி சமூக வலைதளங்களில் வைரலானது.

# இந்தியா – மாலத்தீவு இடையே ராணுவத்தைத் திரும்பப்பெறுவது குறித்து பேச்சுவார்த்தை



**கம்பாலா : ஜன. 20,**

**மாலத்தீவுடனான உறவு விரிசலுக்கு மத்தியில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், மாலத்தீவு வெளியுறவுத்துறை அமைச்சர் மூசா ஜமீரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அமைச்சர்கள் இருவரும் இருநாட்டு உறவுகள் பற்றி வெளிப்படையான உரையாடல் நடத்தினர். இருநாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருக்கும் நிலையில் இச்சந்திப்பு நடந்துள்ளது கவனிக்கத்தக்கது.**

அணிசேரா அமைப்பின் இரண்டு நாள் உச்சி மாநாடு உகாண்டா தலைநகர் கம்பாலாவில் நேற்று தொடங்கியது. அதில் பங்கேற்பதற்காக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கம்பாலா சென்றுள்ளார். இதனிடையே அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அங்கு, மாலத்தீவு வெளியுறவுத்துறை அமைச்சர் மூசா ஜமீரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இதுகுறித்து ஜெய்சங்கர் தனது எக்ஸ் பக்கத்தில் சந்திப்பு குறித்த புகைப்படத்தை வெளியிட்டு, "கம்பாலாவில் மாலத்தீவு வெளியுறவுத்துறை அமைச்சர் மூசா ஜமீரை சந்தித்துப் பேசினேன். இருநாடு உறவுகள் பற்றி வெளிப்படையாக உரையாடினோம். மேலும் அணிசேரா அமைப்புத் தொடர்பான விவகாரம் குறித்தும் விவாதித்தோம்." என்று தெரிவித்துள்ளார்.

மலாத்தீவு வெளியுறவுத்துறை அமைச்சர் மூசா ஜமீர் தனது எக்ஸ் பக்கத்தில், "அணிசேரா அமைப்பின் உச்சிமாநாட்டுக்கு இடையில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்திய ராணுவ வீரர்களைத் திரும்பப் பெறுவது, மாலத்தீவில் நடந்து கொண்டிருக்கும் வளர்ச்சித் திட்டங்களை விரைவுபடுத்துவது, சார்க் மற்றும் அணிசேரா அமைப்பின் ஒத்துழைப்பு குறித்து நாங்கள் உரையாடினோம். இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தி விரிவாக்குவது குறித்தும் நாங்கள் விவாதித்தோம்" என்று தெரிவித்துள்ளார்.

கடந்த 2023ம் ஆண்டு மாலத்தீவில் நடந்த தேர்தலில் மக்கள் தேசிய காங்கிரஸ் தலைவர் முகமது முய்சு புதிய அதிபராக தேர்வு செய்யப்பட்டார். சீன ஆதரவாளரான அவர் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இந்தியாவுக்கு எதிராக செயல்பட்டு வருவதாக நம்பப்படுகிறது. நவம்பர் மாதம் அதிபர் மாளிகை வெளியிட்ட அறிக்கை ஒன்றில், "செப்டம்பரில் நடந்த அதிபர் தேர்தலில், இந்தியாவிடம் வலுவான கோரிக்கை வைக்க மக்கள் எனக்கு ஆணை பிறப்பித்துள்ளனர். மாலத்தீவு மக்களின் ஜனநாயக விருப்பத்துக்கு இந்தியா மதிப்பளிக்கும் என்று நம்புகிறோம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனிடையே ஜன.8ம் தேதி முகமது முய்சு சீனாவுக்கு சென்றார். அப்போது மாலத்தீவின் சுற்றுலா வளர்ச்சிக்கு சீனா ஒத்துழைக்கும் என்பது உள்பட இரு நாடுகளுக்கும் இடையே 20 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இந்தப் பயணத்தினைத் தொடர்ந்து இந்திய ராணுவத்தை மாலத்தீவிலிருந்து வெளியேற அறிவுறுத்தும் அறிவிப்பு வந்தது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, இரண்டுநாள் பயணமாக கடந்த 2-ம் தேதி லட்சத்தீவு சென்ற பிரதமர் நரேந்திர மோடி, தனது பயண அனுபவம் குறித்து எக்ஸ் சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்திருந்தார். அதோடு, அங்கு எடுக்கப்பட்ட பல்வேறு புகைப்படங்களை பிரதமர் பகிர்ந்திருந்தார். இந்நிலையில், அதை விமர்சிக்கும் வகையில் சர்ச்சையான கருத்தை சமூக வலைதள பதிவு மூலமாக தெரிவித்திருந்தனர் மாலத்தீவு அமைச்சர்களான மரியம் ஷியூனா, மல்ஷா ஷரீப் மற்றும் அப்துல்லா மஹ்சூம் மஜித் ஆகியோர். இது சமூக வலைதளங்களில் கவனம் பெற்றது.

இதற்கு இந்திய அரசு தரப்பில் விளக்கம் கேட்கப்பட்டது. அதேநேரத்தில் மாலத்தீவின் முன்னாள் அதிபர் முகமது நஷீத் மற்றும் எதிர்க்கட்சியினர் கண்டனம் தெரிவித்தனர். அங்கு ஆட்சியில் உள்ள முகமது முய்சு அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்ட சூழலில் சர்ச்சை கருத்து தெரிவித்த மூன்று அமைச்சர்களும் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். இதனால் இருநாட்டு அரசுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள கடல்சார் நாடுகளில் இந்தியாவின் முக்கியமான அண்டை நாடாக மாலத்தீவு உள்ளது. இங்குள்ள முந்தைய அரசால் இருநாடுகளுக்கு இடையில் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புத்துறை சார்ந்து பல்வேறு ஒத்துழைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற இந்தியாவின் கொள்கையில் அதிகம் பயனடையும் நாடு மாலத்தீவு என்பது குறிப்பிடத்தக்கது.

# அரச குடும்பத்தை விமர்சித்தவருக்கு 50 வருடங்கள் சிறை



**தாய்லாந்து : ஜன. 20,**

**தென்கிழக்கு ஆசிய நாடான தாய்லாந்தில் உள்ளது, சியாங் ராய் பிராந்தியம். அங்கு அரசியலமைப்பு சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட அரசாங்கத்தில் அரச குடும்பத்தை சேர்ந்தவருக்கும் ஆட்சியமைப்பில் பங்கு உண்டு.**

தற்போது மஹா வஜிரலாங்கோர்ன் அரசராக உள்ளார். இப்பிராந்தியத்தில் ஆடைகள் விற்பனை தொழில் புரிந்து வந்தவர், மோங்கோல் திரகோட். திரகோட், 3 வருடங்களுக்கு முன் தனது ஃபேஸ்புக் கணக்கில், அந்நாட்டின் அரச பரம்பரை குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகளை தெரிவித்தார்.

அரசகுடும்பத்தை குறித்த அவதூறு பரப்புதல் "லெஸ் மெஜஸ்டெ" எனும் குற்றமாக அந்நாட்டில் கருதப்பட்டு தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. திரகோட் மீது இக்குற்றப்பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. அங்கு அவருக்கு 28 வருட கால சிறை தண்டனை வழங்கப்பட்டது.

இதை எதிர்த்து மேல்முறையீடு செய்தார், திரகோட். மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மீண்டும் வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்த தீர்ப்பில், திரகோட்டிற்கு முன்னர் விதிக்கப்பட்டிருந்த 28 வருட தண்டனையுடன், மேலும் 22 வருட கால சிறை தண்டனை வழங்கப்பட்டு, அவரது தண்டனை காலம் 50 வருடமாக அதிகரிக்கப்பட்டது. திரகோட்டின் விமர்சனம் குறித்த முழு விவரங்கள் தற்போது தெரியவில்லை. ஆனால், அவர் பதிவிட்டிருந்த ஒவ்வொரு விமர்சனத்திற்கும் தண்டனை அதிகரிக்கப்பட்டு, தற்போது 50 வருடம் சிறை தண்டனை வழங்கப்பட்டதாக தெரிகிறது.

கருத்து சுதந்திரத்திற்கு எதிராக கருதப்படும் "லெஸ் மெஜஸ்டெ" சட்டம் பரவலாக விமர்சிக்கப்பட்டாலும், அதை மாற்றவோ, நீக்கவோ முயன்றால் நாட்டின் அரசியலமைப்பு சிதைந்து விடும் என அந்நாட்டின் பழமைவாதிகள் அச்சுறுத்தி வருகின்றனர்.

# கடும் பனிபொழிவால் ஓடுதளத்தில் இருந்து சறுக்கிய விமானம்



**நியூயார்க் : ஜன. 20,**

**அமெரிக்காவின்நியூயார்க் விமான நிலையத்தில் கடும் பனிப்பொழிவு காரணமாக விமானம் ஒன்று ஓடுதளத்திலிருந்து சறுக்கி புல்வெளியில் நின்ற சம்பவத்தில் அதிர்ஷ்டவசமாக 50பயணிகள் உயிர்த்தப்பினர்.**

அமெரிக்காவில் கடந்த சில நாட்களாக பனிப்பொழிவு அதிகரித்துவருகிறது. குறிப்பாக வட மாகாணங்களில் உள்ள முக்கிய நகரங்களில் கடும் பனிப்பொழிவு காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைபாதிக்கப்பட்டுள்ளது. பனிப்பொழிவு காரணமாக ஏராளமான விமான சேவைகள் தற்காலிகமாக ரத்து ரத்து செய்யப்பட்டுள்ளதோடு, பல விமான சேவைகள் தாமதமாக இயக்கப்பட்டு வருகிறது. இதனால் அங்கு விமான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நியூயார்க் நகரில் உள்ள பிரடரிக் டக்ளஸ் கிரேட்டர் ரோச்சஸ்டர் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று காலை அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமான நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் ஒன்று 50 பயணிகள் மற்றும் 6 விமான பணியாளர்களுடன் தரையிறங்கிக் கொண்டிருந்தது. அப்போது கடுமையான பனிப்பொழிவு இருந்ததால், ஓடுதளத்தின் பல்வேறு பகுதிகளிலும் பனி மூடி இருந்தது. ஓடுதளத்தில் பத்திரமாக விமானம் தரையிறங்கிய போதும், விமானத்தை ஓடுதளத்தில் நிறுத்த விமானியால் முடியவில்லை. இதனால் விமானம் அருகில் இருந்த புல்வெளிக்கு சறுக்கிச் சென்று அங்கு நின்றது.

உடனடியாக மீட்பு படையினர் விரைந்து வந்து சுமார் அரை மணி நேரத்திற்கு பிறகு விமானத்தில் இருந்த 50 பயணிகளையும் பத்திரமாக மீட்டனர். நல்வாய்ப்பாக இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை. இருப்பினும் விமானத்தின் லேண்டிங் கியர் பகுதி சேதமடைந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதால், விமானத்தை பழுது நீக்குவதற்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்த சம்பவம் அமெரிக்காவில் விமான பயணிகள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# நடுவானில் தீ பிடித்து எரிந்தபடி சென்ற விமானம்

**வாஷிங்டன் : ஜன. 20,**

**நடுவானில் தீ பிடித்து எரிந்தபடி விமானம் ஒன்று பறக்கும் காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.**

அமெரிக்காவின் அட்லாஸ் ஏர் போயிங் நிறுவனத்திற்கு சொந்தமான சரக்கு விமானம் ஒன்று நடுவானில் தீ பிடித்து விபத்துக்குள்ளானது. அமெரிக்காவின் மியாமி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 10:46 மணியளவில் அட்லஸ் ஏர் விமானம் 95 புறப்பட்டுள்ளது.

புறப்பட்ட சிறிது நேரத்திலேயே வானத்தில் விமானம் தீ பற்றி எரிய ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து விமானி உடனடியாக விமானத்தை மியாமி சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கினார். இந்த விமானம் பியூர்டோ ரிக்கோவில் உள்ள சான் ஜூவான் நகருக்கு செல்ல திட்டமிடப்பட்டிருந்தது.

விமானம் தரையிறங்கியதும் விமான நிலையத்தில் தயாராக இருந்த பாதுகாப்பு குழுவினர் தீயை அணைத்தனர். இந்த விபத்தில் உயிர்சேதம் எதுவும் ஏற்படவில்லை. விமானம் நடு வானில் தீ பிடித்து எரியும் காட்சி இணையத்தில் வைரலாகி வருகிறது.

# ஆப்பிள் நிறுவன கைக்கெடிகாரங்களுக்கு தடை விதித்த அமெரிக்கா



**வாஷிங்டன் : ஜன. 20,**

**ஆப்பிள் சீரியஸ் 9 மற்றும் ஆப்பிள் அல்ட்ரா 2 ஆகிய ஸ்மார்ட் கைக்கெடிகாரங்களை விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.**

ஜபோன், கணினி உள்ளிட்ட முன்னணி தொழில்நுட்ப சாதனங்களை தயாரிக்கும் நிறுவனம் ஆப்பிள். அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தை தலைமையிடமாக கொண்டு இந்த நிறுவனம் செயல்படுகிறது. இந்த நிறுவனத்தின் தயாரிப்புகளுக்கென்று ஒரு தனித்தன்மை மற்றும் ரசிகர் பட்டாளம் உள்ளது.

இதற்கிடையே ஆப்பிள் நிறுவனத்துக்கும், பிரபல மருத்துவ தொழில்நுட்ப நிறுவனமான மசிமோவுக்கும் இடையே காப்புரிமை தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டது. இதுதொடர்பாக சர்வதேச வர்த்தக ஆணையத்தில் மசிமோ நிறுவனம் வழக்கு தொடுத்தது.

இதில் மசிமோ நிறுவனத்தின் காப்புரிமையை ஆப்பிள் நிறுவனம் மீறியது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே ஆப்பிள் சீரியஸ் 9 மற்றும் ஆப்பிள் அல்ட்ரா 2 ஆகிய ஸ்மார்ட் கைக்கெடிகாரங்களை அமெரிக்காவில் விற்க தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் கையிருப்பில் உள்ள கைக்கெடிகாரங்களை அங்குள்ள சில்லறை விற்பனையாளர்கள் விற்பனை செய்யலாம். அதேபோல் அமெரிக்கா தவிர மற்ற நாடுகளில் விற்பனை செய்ய எந்த தடையும் விதிக்கப்படவில்லை என சர்வதேச வர்த்தக ஆணையம் கூறி உள்ளது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகளை தொடங்கி வைத்தார் பிரதமர் மோடி

# பழனி தைப்பூச திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது





# அசாம் முதல்வரின் கைது மிரட்டல் சவாலை ஏற்பதாக காங்கிரஸ் பதிலடி


சென்னை / புதுக்கோட்டை | 20.01.2024 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்